**பாடம் – 3**

# பாவம் என்னும் பிரச்சனை
# THE PROBLEM OF SIN

''இது தவறு'' என்று தெரிந்த ஒன்றை நீங்கள் எப்பொழுதாவது செய்ய தெரிந்தெடுத்ததுண்டா? அப்படிப்பட்ட தவறான காரியங்களை வேதாகமம் ''பாவம்'' என்று சொல்கிறது. பொதுவான நோக்கத்திலே, தேவன் நமக்கு ஒரு கட்டளையைக் கொடுத்து, அதை நாம் செய்ய மறுக்கும்போது, அது நம்மை ''சட்டத்தை மீறுகிறவர்களாக'' அல்லது சட்டமில்லாதவர்களாக மாற்றுகிறது.

''பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிர மாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.'' (1யோ. 3:4) மற்றொரு விதத்தில் சொல்லப்போனால், வேதாகமம் சில வற்றைப் பாவம் என்று சொல்கிறது. உதாரணமாக, திருடுவது என்பது பாவம். திருடர்கள் அநீதிக்காரர்களில் ஒருவராக கருதப் படுவார்கள் (1கொரி.6:9,10) மேலும் அவர்கள் பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை'' திருடுகிறவன் இனித் திருடாமல்....'' (எபே. 4:28) திருடுவது ஒரு தவறு. நாம் திருடுவோமானால், நாம் தேவனுடைய கட்டளையை உடைக்கின் றோம். ஆகையால் பாவம் செய்கின்றோம்.

உண்மையை மறுப்பதும் பாவம்தான். ஏனென்றால் வேதாகமம் உண்மையாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் ஒரு புத்தகமாகிய ரோமரில் பாவத்தைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. மனிதன் எப்பொழுதுமே உண்மையை அறிந்த தில்லை என்று கூற முடியாது. ஏனென்றால் அவன் அதை விட்டு திரும்பி, அதை புறக்கணித்து விட்டான் (ரோ.1:18-20). கீழே உள்ள சில வசனங்கள் எவ்வாறு மனிதகுலம், தேவனையும் அவருடைய வார்த்தையையும் பார்க்கிறது என்று கூறுகின்றன. ''அவர்கள் தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனை களினாலே வீணரானார்கள். உணர்வில்லாத இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்தி லுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக் கொடுத்தார்.

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய் யாக மாற்றி, சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும்

எல்லா மனிதர்களும் சத்தியத்தை அறிய வேண்டும் பரிசுத்த வேதாகமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் விட்டுவிடுவார். தவறான காரியங்கள் நம்மை விட்டுவிடுவார் (2கொரி. 4:3,4). நாம் தவறான அநேகர் இதன் காரணமாக அழிந்து போயிருக்கிறார்கள். அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும் (2கொரி.2:10)

ஆபிரகாமையும், அவன் சந்ததியையும் தேவன் தன் இரண்டு கூட்டத்தார் உருவாகினார்கள். ஆபிரகாமின் அழைக்கப்பட்டனர். புறஜாதியார் - மற்ற அழைக்கப்பட்டனர். அழைக்கப்பட்டனர். ரோமருக்கு எழுதப்பட்ட நிருபத்தில், பாவத்திற்குட்பட்டவர்கள் என்று கூறினார். புறஜாதியார் மாறினார்கள். யூதர்களுக்கு நியாயப்பிரமாணம்



சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது ஸ்தோத்தரிக்கப்பட்டவர். ஆமென்'' (ரோமர். 1:21-25)

என்று தேவன் எதிர்பார்க்கிறார். அதனால்தான் தேவன் அதை மறுதலித்தால் தேவன் நம்மை மூடனாகும்படி குருடாக்கும்படியும், நித்தியமாய் அழிந்துபோகும் படியும், போதனைகளால் ஏமாற்றப்படும்படியாக அனுமதித்தார். சத்தியத்தின் மீதுள்ள அன்பை அவர்கள்

சொந்த ஜனமாக தெரிந்து கொண்டபொழுது, இந்த உலகத்தில் சந்ததியார் - இவர்கள் பின்பு யூதர்கள் என்று புறஜாதியார் - மற்ற தேசத்தின் அனைத்து மக்களும் இப்படியாக அப்போஸ்தலனாகிய பவுல் யூதர் களும், புறஜாதியாரும் சத்தியத்தைப் புறக்கணித்து, விக்கிரக ஆராதனைக்காரர்களாக கொடுக்கப்பட்டிருந்தாலும், அதை அவர்கள் கைக் கொள்ளவில்லை. ஒவ்வொருவனும் பாவஞ்செய் தார்கள். (யூதரானாலும், புறஜாதிகளானாலும்). ''நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி'' (ரோ.3:10,23)

நீங்கள் பாவம் செய்திருக்கிறீர்களா? ஆம். மேலே கூறப்பட்டுள்ள வசனங்கள் இதைத் தெளிவாக கூறுகிறது.

ஆனால் நீங்கள் ஆச்சரியப்படலாம். எத்தனைத் தரப்பட்ட பாவங்கள் உள்ளன? உண்மையில் அநேக தரப்பட்ட பாவங்கள் உள்ளன. சில பாவங்களின் பட்டியல் கீழேயுள்ளன. ரோம. 1:29-32 ; 1கொரி.5:11 ; 6:9,10 ; கலா. 5:19,21 ; எபே. 4:26-32 ; 2தீமோ. 3:1-5 மேலும் வெளி. 21:8ல் சில பாவத்தின் பிரிவுகள் தரப்பட்டுள்ளன.

மாம்சத்தின் பாவங்கள் உண்டு. மாம்ச இச்சைகளை சட்ட விரோதமாக தீர்த்துக் கொள்வதை இது குறிக்கிறது. பாலியல் ஒழுக்கக் கேடு (அதாவது சொந்த கணவன், மனைவியைத் தவிர வேறொருவரோடு பாலியல் உறவு கொள்ளுதல்) விபச்சாரம், சுயபுணர்ச்சி, வேதம் அங்கீகரிக்காத விவாகரத்து, மற்றும் மறுமணம், குடிபழக்கம் ஆகியவையே. மேலும் தேவன் நம்மை, பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

''உங்களை அழைத்தவர் பரிசுத்தராய் இருக் கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல் லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்த ராயிருங்கள் என்று எழுதியிருக்கிறது. (1பேதுரு 1:15-16)

''பிரியமானவர்களே, அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிற நீங்கள் ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிற இச்சைகளை விட்டு விலகி'' (1பேதுரு 3:11)

''சிந்தையினாலான பாவங்கள்'' உண்டு. பெருமை, பொறாமை, பொருள் இச்சை, கோபம், வெறுப்பு, பிறர்க்கு தவறு செய்தல், நன்றியறி யாமை, மன்னிக்காத தன்மை போன்றவை. சில வகை நாவினால் வெளிப்படுத்தப்படுகிறது. இவைகளை நாம் கட்டுப்படுத்தப்படும்படியாக எச்சரிக்கப்படுகிறோம்.

''இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே மாம்சத்தினாலும் ஆவியினாலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக் கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (2கொரி. 7:1)

நாம் தவறான காரியங்களை செய்யாது இருந்தால் மட்டும் போதாது, மாறாக நன்மையாக காரியங்களை செய்தாக வேண்டும்.

''ஆதலால் ஒருவன், நன்மை செய்ய அறிந்தவனாக இருந்தும், அதைச் செய்யாமல் போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்'' (யாக். 4:17)

**பாவத்தின் சம்பளம் :**

நாம் பாவம் செய்ய தீர்மானிக்கும்பொழுது என்ன நடக்கிறது? நாம் தேவனுடன் கொண்டிருக் கின்ற ஐக்கியத்தை இழந்து போகின்றோம். துவக்கத்தில் ஆதாம், ஏவாள் தங்கள் பாவத்தின் நிமித்தம் தேவனுடன் கொண்டிருந்த தனிப்பட்ட உறவை இழந்தார்கள் (ஆதி. 3). இஸ்ரவேலரின் பாவத்தைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி, ''இதோ இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள்அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்கு கிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது'' (ஏசா. 59:1-2)

தேவன் பரிசுத்தராக இருக்கிற படியால், அவர் பாவத்தை அங்கீ கரிக்கவோ அல்லது அதனுடன் ஐக்கியப்படவோ முடியாது. பதிலாக பாவத்தை தண்டிக்கக்கூடியவராக இருக்கிறார். ''பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோ.6:23)

பாவக்குற்றத்தை சுமந்து கொண்டு மரிப்போமாகில் என்ன வாகும்? நாம் அழிந்துபோய் விடு வோம். இயேசுகிறிஸ்து வரும் ஒரு நாள் இருக்கிறது. தேவனை அறியாதவர்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினை யைச் செலும்படிக்கும், ''கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களின் மகிமைப் படத்தக்கவராயும்.''

நம்மில் ஒவ்வொருவரும் பாவம் செய்திருக் கிறோம். நாம் அனைவரும் தேவனுடைய ஐக்கியத்தை இழந்துளோம். நாம் மரணத்திற்கு ஆவிக்குரிய மரணத்திற்கு தேவனிடத்திலிருந்தும் மற்ற எல்லா ஆசீர்வாதங்களிலிருந்தும் நித்திய பிரிவிற்குமே தகுதியுள்ளவர்கள். நாம் சதா காலமும் துன்பப்பட விரும்பவில்லை. ஆனாலும், அதற்கே தகுதியாய் இருக்கின்றோம்.

நாம் வேதனைப்படுத்திய பரிசுத்த தேவனோ, நாம் நித்தியமாய் அழிந்துபோவதை விரும்ப வில்லை. ஆனால், அவர் பரிசுத்தராக இருப்பதி னால், அவர் நம் பாவத்தைத் தண்டிக்க வேண்டும். நம் பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க தேவன் ஒரு வழியை தீர்மானித்தார். இயேசு கிறிஸ்து நம் இடத்தை எடுத்துக் கொண்டு, நமக்காக தண்டனையை சுமந்தார்.

''நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமாங் களினிமித்தம் அவர் நொறுக்கப் பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

அவர் தம்முடைய ஆத்து மாவை மரணத்திலூற்றி, அக் கிரமக்காரரில் ஒருவராக எண்ணப் பட்டு, அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து, அக்கிரமக் காரருக்காக வேண்டிக் கொண்ட தினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன். பலவான்களை அவர் தமக்குக் கொள்கையாகப் பங்கிட்டுக் கொள்வார்'' (ஏசா. 53:5,12). அநீதி மற்றும் மீறுதல்களுக்கும் அர்த்தம் பாவமாகும்.

''பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்'' (ரோ.6:23). இயேசுகிறிஸ்து தேவத்துவத்தின் ஒரு அங்கமாயிருப்பதினால் ரோமர் 3:26ம் வசனத்தில் பவுல் சொன்னதை நாம் புரிந்து கொள்ள முடியும். மேலும், நீதியுள்ளவரென்றும், இயேசுவின்மேல் விசுவாசமுள்ளவர்களுக்கு நீதி செய்கின்றவர் என்றும் அவர் சொல்கிறார். 2தெச.1:7-9ஐ மீண்டும் வாசியுங்கள். தேவனை உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் சுவிசேஷத் திற்கு கீழ்ப்படிந்துள்ளீரா? இல்லையென்றால், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலே காணாமற்போயுள்ளீர்கள். அடுத்த பாடத்தில் நீங்கள் இயேசுவின் மூலம் எவ்வாறு இரட்சிக்கப் பட முடியும் என்று பார்ப்போம்.